2nd March 1968]

(*b*) the annual income of the Kodaikanal Township Committee;

(*c*) the annual expenditure; and

(*d*) the financial assistance extended by the Government of Madras so far?

கொடைக்கானல் டவுன்ஷிப் கமிட்டி.

திரு. என். ஆர். தியாகராஜன்: மாண்புமிகு உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டு கிறேன்—

(அ) மதுரை மாவட்டத்திலுள்ள, கொடைக்கானல் நகராட்சியை டவுன் ஷிப் கமிட்டியாக ஆக்கிய பிறகு நடந்துள்ள அபிவிருத்தி வேலைகள் என்ன?

(இ) கொடைக்கானல் டவுன்ஷிப் கமிட்டிக்கு வருட வருமானம் எவ் வளவு?

(உ) செலவு எவ்வளவு?

(எ) சென்னை சர்க்கார் இதுவரை கொடுத்த நிதி உதவி எவ்வளவு?

மாண்புமிகு திரு. எம். முத்துசாமி: (அ), (இ), (உ), and (எ) இது குறித்து அவை முன் விவர அறிக்கை[a] ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

திரு. என். ஆர். தியாகராஜன்: தலைவரவர்களே, கொடைக்கானல் டவுன்ஷிப் வேலை திருப்திகரமாக இல்லை என்று அங்குள்ள மக்கள் கருது கிறார்கள். பொதுஜனங்களும், ஊழியர்களும், கட்சி வேறுபாடில்லாமல் அபிப்பிராயப்படுகிறார்கள். மீண்டும் அதை முனிசிபல் நகரமாக்கி தேர்தல் நடத்துவதற்கு அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு திரு. எம். முத்துசாமி: தலைவரவர்களே, இந்த நகரக் குழுவில் பொதுமக்களின் அங்கத்தினர்கள் இடம் பெற்றிருக்கிறார்கள். அவர்களிடமிருந்து திருப்திகரமாக இயங்கவில்லை என்கிற குற்றச்சாட்டு எதுவும் வரவில்லை. குறைகளைப் பற்றி கனம் உறுப்பினர் அவர்கள் எழுதி அனுப்புவார்களானால் என்னென்ன என்று பார்த்து நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். மீண்டும் இதை நகராட்சியாக மாற்றுவது பற்றிய செயல்குறிப்பு எதுவும் தற்போதில்லை.

THIRUMATHI LAKSHMI KRISHNAMURTHY: Sir, in view of the strain on the whole water-main, will the Government consider the question of requesting the township to put up bigger mains as early as possible?

மாண்புமிகு திரு. எம். முத்துசாமி: இருக்கிற நிதி நிலைக்கேற்ப தேவையான நடவடிக்கை எடுக்கப்படும்.

Panchayat elections

*160 *Q.*—THIRU N. R. THIAGARAJAN: Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) the number of panchayats in this State where elections have not yet been conducted; and

(*b*) reasons therefor?

பஞ்சாயத்து தேர்தல்கள்.

திரு. என். ஆர். தியாகராஜன்: மாண்புமிகு உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டு கிறேன்—

(அ) தமிழகத்தில் இன்னும் எத்தனை பஞ்சாயத்துக்களுக்குத் தேர் தல்கள் நடைபெறவில்லை?

(இ) அதற்குக் காரணம் என்ன?

---

a Printed as Appendix III on pages 268-270.

[2nd March 1968

மாண்புமிகு திரு. எம். முத்துசாமி : (அ), (இ) and ஒரு அறிக்கை a இம்மன்றத்தின் முன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. என். ஆர். தியாகராஜன் : தலைவரவர்களே, மதுரை ஜில்லா, கொடைக்கானல் தாலூக்கா, பண்ணைக்காடு ஊரில் நீண்டநாட்களாக தேர்தல் நடத்தப்படாமல் இருக்கிறது. அங்கு தேர்தல் நடத்த என்ன ஏற்பாடு செய்திருக்கிறீர்கள் ? கிராம பஞ்சாயத்து, நகர பஞ்சாயத்து என்று இரண்டு பஞ்சாயத்துக்கள் இருக்கின்றன. அவைகளை ஒரு பஞ்சாயத்தாக ஆக்கப்பட இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. எம். முத்துசாமி : தலைவரவர்களே, தேர்தல் நடைபெறாததற்கான காரணங்களைப் பற்றிய விவரமில்லை. என்னென்ன இடங்களில் நடைபெறவில்லை என்பதைத்தான் சொன்னேன். பொதுவாகத் தேர்தல் நடைபெறாததற்குக் காரணம், முன்பு அவசர நிலை பிரகடனப் படுத்தப்பட்டிருந்ததால் தேர்தல்கள் ஒத்திவைக்கப்பட்டன. நிறைவு செய்யாமல் பல இடங்களில் பதவி இழப்பு, பதவி துறப்பு, உயிர் இழப்பு ஆகிய காரணங்களால் நிறைவு செய்யப்படாமல் இருக்கிறது. கொடைக்கானல் தாலூக்காவில் இருக்கக்கூடிய பண்ணைக்காடு என்ற ஊரில் ஊராட்சி மன்றம் அமைக்கிற முயற்சியில் அரசாங்கம் ஈடுபட்டு நடவடிக்கை எடுத்து வரப்படுகிறது. அது பற்றிய விவரங்கள் தனிக் கேள்வியின் மூலம் அறிவிக்கப்படும்.

Attack on Pavadai Padayachi

*160-A *Q.*—THIRU **N. R. THIAGARAJAN : Will The Hon. the Chief Minister be pleased to state—**

(*a*) whether in Kurinjipadi village, South Arcot district some persons entered into the house of one Pavadai Padayachi and attacked him ;

(*b*) whether he was attacked in the police station also ;

(*c*) whether he died on the way while being taken to the jail ; and

(*d*) if so, the action taken in the matter ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : (On behalf of the Hon. tqe Chief Minister) :

(அ) & (ஆ) இல்லை.

(இ) கடலூரிலுள்ள சப்-மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டுக்கு அழைத்துச் செல்லும்போது பாவாடைப் படையாச்சி காலமானார்.

(ஈ) சிதம்பரம் கோட்டாட்சித் தலைவர், பிரேத விசாரணை செய்து அதன் பின்னர் பிரேதப் பரிசோதனைக்கு அனுப்பி வைத்தார். நடந்த சம்பவம் பற்றி அவர், விரிவானதோர் விசாரணையும் நடத்தினார். பிரேதப் பரிசோதனையின் முடிவு அறிக்கை, புலன் விசாரணையில் கண்ட காரண காரியங்கள் இவைகளின் அடிப்படையில், பாவாடைப் படையாச்சி இயற்கையாகவே காலமானார் என்பதாக விசாரணை அதிகாரி முடிவு கூறியுள்ளார்.

திரு சி. பி. சிற்றரசு : தலைவரவர்களே, அந்த மாதிரி நடக்கிற சம்பவங்களுக்கு பஞ்சாயத்தார்கள் கூடி முடிவு செய்யப்பட வேண்டும். அப்படிச் செய்யப்பட்டதா ? அந்த பஞ்சாயத்தார்கள் யார் யார் என்பதை சொல்ல முடியுமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : 500 பேர்கள் கொண்ட கூட்டத்தில் அவர்கள் முன்னிலையில் பஞ்சாயத்துக்காரர்கள் இருந்து, குறிஞ்சிப்பாடி மணியக்காரர் தலைமையில் 5 பேர்கள் இருந்து அது பற்றி முடிவு செய்து

a Printed as Appendix IV on pages 270–127.